01.12.2025

O.S.No.237/2011

வா.சா.1.திரு.சின்னையா என்ற வில்லான் பூசாரி, த.பெ.திரு.வில்லான்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி வேலம்மாள் என்றால் சரிதான். மேற்படி வேலம்மாள் 4 வருடத்திற்கு முன்னாடி இறந்துவிட்டார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி சுதந்திரா தேவி என்பவரும் 3 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதி ஆகியோர் வழக்கு நிலுவையில் உள்ள சமயம் இறந்துவிட்டார்கள் என்ற விவரத்தை நான் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் எனது பெயரை வில்லான் என்ற சின்னையா வில்லான் பூசாரி என்று நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். எனது பெயர் சின்னையா என்ற வில்லான் பூசாரி என்றோ எனது தகப்பனார் பெயர் வில்லான் என்பதை மெய்ப்பிக்கவோ நான் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 1ம் வாதியின் கணவர் என்பதை மெய்ப்பிக்க எந்த ஒரு ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 8ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்தில் 1ம் வாதிக்கு கண் பார்வை சரியாக தெரியாத காரணத்தினாலும் காது கேட்காத காரணத்தினாலும் அதனால் சமூக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க முடியாத நிலை இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். 1ம் வாதிக்கு கண் பார்வை சரியாக தெரியவில்லை என்பது சம்மந்தமாகவோ காது கேட்கவில்லை என்பது சம்மந்தமாகவோ ஆவணம் எதுவும் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் எனது கணவருக்கு வழக்கு சங்கதிகள் அனைத்தும் நன்கு தெரியும் என்றோ தாவா சொத்து பற்றி விவரம் தெரியும் என்றோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**2.** வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிச்சம்மாள் கைரேகை வைத்தது குறித்தோ பாப்பா கைரேகை வைத்தது குறித்தோ 1,2,4,5 பிரதிவாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதியின் கணவர் கையெழுத்து செய்தார் என்ற விவரம் குறித்தோ வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சங்கதிகள் நிரூபண வாக்குமூலத்தில் நான் கையெழுத்து போட்டப்பின்புதான் தெரியுமா என்றால் அதற்கு முன்பாக தெரியும். வழக்கு சம்மந்தமாக விவரம் எப்போது எனக்கு தெரியும் என்ற விவரத்தை நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியவில்லை.

**3.** இந்த வழக்கு குறித்து எனக்கு என்ன சங்கதி தெரியும் என்றால் சொத்து வாங்கியது, பணம் கொடுத்தது எல்லாமே நான் தான். மேற்படி விவரத்தை நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை எந்த தேதியில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் 31.01.2009ம் ஒப்பந்தம் செய்யப்பட்டு ரூ.1 லட்சம் அட்வான்ஸ் கொடுக்கப்பட்டது. 05.01.2010ல் கிரையம் எழுதப்பட்டது. அட்வான்ஸ் தொகை கொடுப்பதற்கு முன்பாக வில்லங்கம் போட்டுப்பார்த்தோம் எந்த வில்லங்கமும் இல்லை என்று வந்தது. அட்வான்ஸ் தொகை கொடுத்தோம். கிரையம் பதிவு செய்வதற்கு முன்பாக 2 நாட்களுக்கு முன்பாக வில்லங்கம் போட்டுப்பார்த்தோம். எந்த

வில்லங்கமும் வரவில்லை. பதிவு செய்து கொண்டோம். நான் சொல்வதுபோல் 31.01.2009ம் தேதி கிரையம் ஒப்பந்த ஆவணம் செய்து கொண்டேன் என்று சொல்வது சம்மந்தமாக ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் கொடுக்கப்பட்டுள்ளது. 31.01.2009ம் தேதிய கிரைய ஒப்பந்தம், 05.01.2010 தேதி கிரைய ஆவணம் ஏற்பட்ட சம்யம் மேற்படி ஆவணம் குறித்த சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியும் என்று நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடப்படவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 31.01.2009ம் தேதிய கிரைய ஒப்பந்தம், 05.01.2010 தேதி கிரைய ஆவணம் ஏற்பட்ட சம்யம் மேற்படி ஆவணம் குறித்த சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியும் என்று 1ம் வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

**4.** 1, 2 வாதிகளுக்கு தாவா சொத்தில் சுவாதீனம் இருந்து வருகிறது என்பது சம்மந்தமாக எந்த ஒரு ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சிட்டா தாக்கல் செய்துள்ளேன். சிட்டா 1,2,4,5 பிரதிவாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதியின் கணவர் பெயரில் உள்ளது. 6ம் பிரதிவாதி OS No.225/2009 என்ற வழக்கில் 1,2,4,5 பிரதிவாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதியின் கணவர் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மோசடியானது என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த வழக்கிற்கும் எங்களுக்கும் சம்மந்தமில்லை.

**5.** OS No.225/2009 என்ற வழக்கில் 6ம் பிரதிவாதி பெற்ற தீர்ப்பானது எவ்வாறு மோசடியானது என்ற விவரத்தை 1ம் வாதி தாக்கல் செய்த வழக்குரையிலோ, கூடுதல் எதிர் வழக்குரை மூலமாகவோ

தெரிவிக்கவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 6ம் பிரதிவாதி பாப்பத்தி என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கும் அவருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. இந்த வழக்கில் 1 முதல் 5 பிரதிவாதிகளில் தற்போது யார் உயிருடன் இருக்கிறார்கள் என்றால் 2ம் பிரதிவாதி சொக்கலிங்கம் என்ற மாறன் மற்றும் 5ம் பிரதிவாதி செந்தில் ராம், 3ம் பிரதிவாதி சித்ரா ஆகியோர் உயிருடன் உள்ளனர். 3ம் பிரதிவாதிக்கு சித்ராவிற்கு 2 குழந்தைகள் உள்ளது என்றால் ஆமாம். மேற்படி 2 குழந்தைகளும் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் ஆமாம். மைனராக இருப்பதால் சேர்க்கவில்லை.

**6.** OS 225/2009 என்ற வழக்கில் கருங்காலகுடி சார்பதிவாளர் மற்றும் மாவட்ட பதிவாளர் மதுரை வடக்கு அவர்களும் 6, 7 பிரதிவாதிகளாக காண்பித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பரிகாரம் பெறப்பட்டது என்ற சங்கதி எனக்கு எப்போதும் தெரியும் என்றால் எனக்கு தெரியவே தெரியாது. OS 225/2009 என்ற வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். OS 225/2009 என்ற வழக்கு குறித்த சங்கதி வாதிகளுக்கு நன்கு தெரியும் என்றாலும் அவ்வாறு தெரிந்து இருந்தும் இந்த வழக்கில் வேண்டுமென்றே தெரியாது என்று சொல்கிறேன்என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலே 6 வது பத்தில் மேற்படி வழக்கின் தீர்ப்புரை குறித்து தெரிவித்துவிட்டு தற்போது வேண்டுமென்றே தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**7.** OS 225/2009 என்ற வழக்கில் 6,7 பிரதிவாதிகளுக்கு எதிராக மாண்புமிகு நீதிமன்றம் 3ம் தரப்பினர் யாருக்கும் எவ்வித பதிவும் செய்யக்கூடாது என்று வலியுறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பித்ததையும்

மீறி வாதிகள் கிரைய பதிவு ஏற்படுத்தியது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் என்றால் நீதிமன்ற தீரப்புரையை பற்றி எங்களுக்கு தெரியாது. நீதிமன்ற தீரப்புரை மீறி ஆவணம் பதிவு செய்துள்ளதால் வாதிகள் நல்லெண்ணத்துடன் கிரைய வாங்கிய நபர் என்ற விளக்கத்திற்குள் வர மாட்டார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மீது உரிமை கொண்டாட வாதிகளுக்கு எவ்வித சட்டபூர்வ தகுதியோ அருகதையோ கிடையாது என்றால் சரியல்ல.

8. வழக்கின் சங்கதிகள் எனக்கு குறித்து நேரடியாக தெரியும் என்ற வாசங்கமானது பிராதிலோ நிரூபண வாக்கமூலத்திலோ தெரிவிக்காத நிலையில் என்னுடைய சாட்சியம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(திரு.P. மகாராஜன், எம்.எல்.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.